# யாழ் மூளாய்
# செல்லப்பா நடராசா
## நினைவேடு



82, அளுத்மாவத்தை,
சிலாபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மூளாய்ப்பதி வாசர்
இருமரபுந் தூய மானா முதலியார் வழித்தோன்றல்
ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி

# அமரர் செல்லப்பா நடராசா

# நினைவேடு



82, அளுத்மாவத்தை,
சிலாபம்.
1999.02.09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எங்கள் அப்பா

# ஸ்ரீ செல்லப்பா நடராசா



தோற்றம் : 1926.01.04 மறைவு : 1999.01.10

## திதி நிர்ணயம்

ஆண்டுவெகு தானியவென் அம்மார் கழித்திங்கள்
நாண்மாண் பபர நவமியென்ப - காண்டகுசீர்ச்
செல்லப்பா செய்தவத்துச் செம்மல் நடராசா
நல்லோன் கழல்சேர்ந்த நாள்.

விக்னேஸ்வரி
யோகராஜன்

மோகனராஜன்
மதனராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எங்கள் அம்மா

அமரர். திருமதி.

# யோகேஸ்வரிதேவி நடராசா




தோற்றம் : 14.03.1929 மறைவு : 06.12.1990

## திதி வெண்பா

ஆண்டுபிர மோதூத அண்டிவரு கார்த்திகைப் பின்
பூண்ட பஞ்ச மித்திதியே பொற்புடனே உ மாண்புபல
வாய்த்தகுண யோகேஸ் வரிதேவி பூதவுடல்
நீத்திறைவன் தாற்சேர்ந்தார் நேர்ந்து.

விக்னேஸ்வரி மோகனராஜன்
யோகராஜன் மதனராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# சமர்ப்பணம்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியாகிப்
பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்பெய்திய
தெய்வமாம் *செல்லப்பா நடராசா* நினைவாக
ஐயன்சுமுகன் தாளிணைகளை இவ்வேடு அலங்கரிப்பதாக.

| | |
|---|---|
| விக்னேஸ்வரி | திருநாவுக்கரசு |
| யோகராஜன் | ஜீவினி |
| மோகனராஜன் | பவானி |
| மதனராஜன் | கமலாஜினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பண் - காந்தார பஞ்சமம் இராகம் - கேதாரகௌளை

அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. 2

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றவர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
யங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினு
மிம்மை வினையடர்த் தெய்து போழ்தினு
மம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. 6

வீடு பிறப்பை யறுத்து மெச்சினார்
பீடை கெடுப்பன பின்னை நாடொறு
மாடு கொடுப்பன மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே. 8

கார்வண னான்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. 9

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - கௌசிகம் இராகம் - பைரவி

அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. 1

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலா
நம்ப னாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. 3

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலா
னயம்வந் தோதவல் லார்தமை நண்ணினா
னியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக
ளில்லா ரேனு மியம்புவ ராயிடி
னெல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரா
னல்லார் நாம நமச்சி வாயவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினு
முரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேற்
றலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலு
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பரா
யாதுங் காண்பரி தாகிய லந்தவ
ரோது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொற்
சிந்தை யான்மகிழ் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார்

# நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம் இராகம் - கேதாரகௌளை

அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. 2

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோ
மடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலா
மந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லா
னலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிலக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலு
மோடினே னோடிச்சென் றுருவங் காண்டலு
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாத றிண்ணமே
யந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலா
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி நாயனார்

# திருப்பாண்டிக்கொடுமுடி

பண் - பழம்பஞ்சுரம் இராகம் - சங்கராபரணம்

அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாததன் மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

இட்ட னும்மடி யேத்து வாரிகழ்ந்த
திட்ட நாண்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

ஓவு நாளுணர் வழியு நாளுயிர்
போகு நாளுயர் பாடைமேற்
காவு நாளிவை யென்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்புகழெம்பி ரானெந்தை
தம்பி ரானென்பொன் மாமணி
கல்லை யுந்திவ ளம்பொ ழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி யென்றடி
யேனு நான்மிக வஞ்சினே
னஞ்ச லென்றடித் தொண்ட னேற்கரு
ணல்கி னாய்க்கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

ஏடு வானிளந் திங்கள் சூடினை
யென்பின் கொல்புலித் தோலின்மே
லாடு பாம்பத ரைக்க சைத்த
வழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
தேன்வி னைகளும் விண்டன
னெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில் பெற
நின்ற காவிரிக் கோட்டைக்
குரும்பைமென் முலைக்கோதை மார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்ப னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்போ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம
மர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயி
லாடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

சார ணன்றந்தை யெம்பி ரானெந்தை
தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்பி
தற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மனறொ ழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

கோணி யபிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லுவார்க்கில்லைத் துன்பமே.

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பெருந்துறையில் அருளியது

# அடைக்கலப்பத்து

(பக்குவநிண்ணயம்)

## கலவைப் பாட்டு

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின்
சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன்
போயினர் யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன்
உடையாய் உன் அடைக்கலமே.

வெறுப்பனவே செய்யும் என்
சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்
பவனே பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளால் என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

பெரும்பெருமான் என்பிறவியை
வேரறுத்துப் பெரும்பிச்சுத
தரும்பெருமான் சதுரப்பெரு
மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு
மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தில் நின் கழற்புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான் யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
அழிகின்றனன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்டுன் திறம்மறந்திங்கு
இருள்புரி யாக்கையி லேகிடந்
தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்
பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரியாய் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

மாமழைப்மைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்தாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய் அடி
யேன் உன் அடைக்கலமே.

மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணனாய் புரள்வேனைப் புராமற்
புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித் தென்
பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவடு வகிரன்ன கண்ணி
பங்கா நின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்
நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்
கரந்து பரந்துள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

பிறிவறியா அன்பர்நின் அருட்பெய்
கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்
உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கின்றேன் விக்கினேன் வினையேன்
என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகந்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்கு கின்றேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

அற்புதத் தெய்வம் இதனில்மற் றுண்டோ
அன்பொரு தன்னைஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
அரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் உயர்திரு

# செல்லப்பா நடராசா அவர்கள்

# வாழ்வு சீர் பரவல்

ஈழவள நாட்டின் சிரமாம் யாழ்ப்பாணமெனும் பொன்னகரில், எழில் கொஞ்சும் சூழலில் தான்தோன்றி விநாயகனதும், முத்துக்குமார சுவாமியதும் அருள்வளம் பெருகும் பகுதியில் கற்றுத் தெளிந்த மூதறிஞருறை மூளாய் எனும் பெருமைமிகு பகுதியில் மானா முதலி கோத்திரத்து வழிவந்தோன் வைத்திய கலாநிதி மாரிமுத்தாபிள்ளை செல்லப்பா, நாகநாதர் செல்லம்மா தம்பதியர் அருந்தவப் புதல்வராக, தனிப் பெருந் தவப்பேறாக, ஸ்ரீ நடராசா அவர்கள் கடந்த 1926 ஜனவரி 04 ஆந் தேதி தோன்றினார்கள். சித்தி விநாயகனை, முத்துக்குமாரசுவாமியை நாளுந்தொழுது பெற்ற பெரும் பெயர் நிதியம் என்ற காரணத்தாற் குழந்தையைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தனர்.

உரிய வேளை வித்தியாரம்பம் செய்து, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி பெறவைத்தனர் சுறுசுறுப்பும் குறும்பும் நிறைந்த சுட்டிப்பயல் நடராசனை ஆசிரியர்கள் அன்புடன் அணைத்துக் கல்வி ஊட்டினர் மேற்படிப்பிற்காகச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிற் சேர்ந்த இளவல் நடராசன் விளையாட்டுத்துறையிலும் முதன்மையோடு விளங்கியதாகத் தெரிகிறது. அந்தக் காலத்திய உயர்கல்வித்தகைமைச் சான்றிதழுக்கான நிலைமையை நிறைவு செய்துகொண்டு கொழும்பு மருத்துவக் கல்லூரியில் தொழிற்கல்விப்பயிற்சி பெற்றார். மருத்துவக் கல்விக் கற்கை நெறி நிறைவாகியதும் மிகுந்தலை, அநுரதபுரம், மட்டக்களப்பு, மாத்தளை, வட்டுக்கோட்டை, தும்பலசூரிய என்னும் இடங்களிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டிற்குரிய வைத்திய கலாநிதியாகப் பணிபுரிந்துள்ளார். "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்னும் வள்ளுவர் மறையை மந்திரமாகக் காண்பவர் அவர். நடராசனின் இந்த நல்ல நினைவு பொருத்தமாக அமையவேண்டுமென விழைந்தனர் பெற்றோர். பிறப்பு வகையால் வந்த முறைப்பெண், நரசிங்கமுதலி கோத்திரத்து வழிவந்த நாகநாதர் விசுவநாதன், மூளாய் ஆறுமுகஞானியார் வழிவந்த செல்லப்பா பாக்கியம் தம்பதியர் மூத்தபுதல்வி யோகேஸ்வரிதேவியை 1951-02-11 இல் இல்லத்துணைவியாக்கி மகிழ்ந்தனர். செந்தமிழுஞ் சுவையும் போற் செறிந்த வாழ்வுத்திருவை அனுபவித்தனர் மணமக்கள். குடும்ப வாழ்க்கை என்பது இப்படித்தான் அமைய வேண்டும் என்று எடுத்துக்காட்டுவது போன்று அமைந்த அவர்கள் வாழ்வின் பயனாக விக்னேஸ்வரி என்னும் அன்புச்செல்வத்தைத் தம் இன்ப வாழ்வின் நிதியமாகக் கண்டார்கள். தொடர்ந்து யோகராஜன், மோகனராஜன், மதனராஜன் என்னும் மூன்று அன்புச் செல்வங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாழ்வைச் சுவைத்தவேளை பெற்ற நிதிக்குவையாம் விக்கினேஸ்வரியை உயர்கல்வி பெறச் செய்யவேண்டுமென விரும்பி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் படிப்பைத் தொடர வைத்தனர். எண்ணியபடி எதுவும் நடப்பதில்லையே! விக்னேஸ்வரி தொடர்பிலும் அது சரிதான் என்று உணர முடிந்தது. அவரை வாழ்க்கைத் துணையாக்கி மகிழ விழைந்த கொல்லங்கலட்டி தண்டிகை முதலி வழித்தோன்றல் சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியர் அருமை மகன் திருநாவுக்கரசு (Chilaw oil mill) அவர்கள் திருமணஞ் செய்துகொண்டார்கள். வானதி, அபிவர்ஷனி, ஆர்த்திகா என்னும் மழலைச் செல்வங்களையும் தம் வழித்தோன்றல் களாக அவர்கள் கண்டுள்ளனர்.

குடும்பத்து முதன் மைந்தன் மூத்த ஆண்மகன் யோகராஜன் இலங்கைப் பல்கலைக்கழகத்து விஞ்ஞானத்துறைப் பட்டதாரி என்னும் உயர் நிலை பெற்றார். தொடர்ந்து இலண்டன் ரெக் மைக்றோ எலெக்றோனிக் பொறியியலாளர் தகுதி பெற்றார். கனேடியன் பிரசையாகியுள்ள அவர் இப்போது ஐக்கிய அமெரிக்காவிற் பணிபுரிகிறார். யாழ் மாப்பாண முதலிவழி வந்த தர்மராஜா தில்லைநாயகி தம்பதியர் பெற்றுக்கொண்ட கனிஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வி ஜீவினியை வாழ்க்கைத் துணைநலமாக்கிக் கொண்ட யோகராஜன் அபிலாஷா, பிரணவன்,சுருதி என்னும் மழலை மலர்களை மரபு வழித்தொடர்பினராகக் கண்டுள்ளார்.

மூன்றாவது இடத்துத் தோன்றிய இரண்டாவது மைந்தன் மோகனராஜன் ஜேர்மனி எனும் ஐரோப்பிய மாநிலத்துள்ளதொரு நாட்டிற் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணிபுரிகிறார். இவர் தாய்வழி உறவினரும், மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மாப்பாண முதலி வழி வந்த சுன்னாகம் இரத்தினசபாபதி மங்கையர்க்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியுமான பவானி எனும் மங்கை நல்லாளை மணந்து பிரவீன் அஸ்வினி என்னும் மழலை முத்துக்களைப் பெற்றுள்ளார்.

நான்காவதாகப் பிறந்த மூன்றாவது மைந்தன் மதனராஜன் இந்தியாவிற் கோயம்புத்தூர் பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறைப் பட்டம் பெற்றுக்கனடாவிற் பணிபுரிகின்றார். இவர் கமலாஜனி என்னும் குலக்கொடியை மணந்து வைத்திகா என்னும் மழலை நிதியைப் பெற்றுள்ளார்.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்

என்பது வள்ளுவர் மறை. வையத்து வாழ்வாங்கு வாழக்கூடிய வகையில் தற்கொண்டான் வளம் பேணி இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணையாக அமைந்து குலக்கொழுந்தாகிய யோகேஸ்வரிதேவியை இல்லத் தலைவியாகப் பெற்றமையே ஒரு தனிப் பெருந்தகைமை. அத்தகு திருவாளன் பெற்ற செல்வங்கள் இன்று வாழும் வாழ்க்கை கொண்டு அவர் உயர்மனப்பண்பினைப் புனிதத்தினை உயிர் உயர்வு கருதிய பணிச்சிறப்பினைச் சிந்திக்க முடிகிறது.

அத்தகு சீரியர் உலகியலுக்கமையத், தோன்றியவை மறையும் என்னும் உண்மைவழி கடந்த 1999.01.10 ஞாயிற்றுக்கிழமை தம் பூதவுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார்கள். அவர் ஆத்ம சாந்தியை வேண்டி வேண்டுதல் செய்வது மூலம் எமது வாழ்வுப் பயனை அனுபவிப்போம்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது கருத்தூன்றிக் கவனித்துச் சிகிச்சையளித்த சிலாபம் வைத்தியசாலை மருத்துவப் பேரருட்செல்வர்கள் தாதியர், இறையடி சேர்ந்தார் என்பது கேட்டு எம்முடன் அன்பு வார்த்தை பேசி ஆறுதலளித்தோர், சோகத்திற் பங்கு கொண்டோர். தொலைத்தொடர்புச் செய்திகள் கடிதங்கள் மூலம் பரிவு காட்டியோர் அனைவர்க்கும் எம் நன்றி.

இன்று (1999.02.09) நடைபெறும் முப்பத்தோராவது நாள் கிரியைகளிலும் பங்கு கொண்டு எல்லாவகையிலும் எமக்கு மனநிறைவளித்த அனைவர்க்கும் எம் உளம் நிறைந்த நன்றி.

மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

82, அளுத்வத்தை,
சிலாபம்.
தொ.பேசி : 032-22314



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

நரசிங்க முதலி
சீனிவாசகம்பிள்ளை
சங்கரப்பிள்ளை
இலகுப்பிள்ளை
இராமலிங்கப்பிள்ளை
நமசிவாயம்பிள்ளை
மாரிமுத்து (சோதிடர்)
+
தங்கமுத்து

முத்தாச்சி
+
விசுவநாதர்
முருகேசப்பிள்ளை
கந்தையாபிள்ளை

காமாட்சிப்

அப்பச்சி பிள்ளை
+
தெய்வானைப்பிள்ளை

சின்னத்தம்பி

அம்பலவாண பிள்ளை (சோதிடர்) →

இருமரபிலும் தூய மானா முதலி
ஐயம்பிள்ளை
சண்முகம்
முருகேசர்
மாரிமுத்து
+
வள்ளியம்மை

முதலியாநாச்சி
+
அம்பலவாணப் பிள்ளை
குமாரசாமி
நாகபூஷணி
முத்துக்குமார சாமி
நமசிவாயம்
வேதநாயகி

வீரபாகு
+
சின்னாச் சிப்பிள்ளை
தாமோதரப்பிள்ளை
திலகவதியார்
மீனாட்சிப்பிள்ளை
சோமசுந்தரம்
பர்வதவர்த்தினி
கனகசபாபதி
சிதம்பரேஸ்வரி
பொன்னம்பலம்
இலட்சுமிப்பிள்ளை

செல்லப்பா

கனகசூரியர்

குஞ்சிப்பிள்ளை
+
தம்பிப்பிள்ளை
பாலசிங்கம்
மகேஸ்வரி

விசுவநாதர்
+
பாக்கியம்

சி
பி
வீ

காமாட்சிப்பிள்ளை
சீதாலட்சுமி
+
முத்துக்குமாரசாமி

செல்லம்மா
நடராசா

விக்கினேஸ்வரி
+
திருநாவுக்கரசு
வானதி
அபிவர்ஷினி
ஆர்த்திகா

யோகராஜன்
+
ஜீவினி
அபிலாஷா
சுருதி
பிரணவன்

மோகன்ராஜன்
+
பவானி
பிரவீன்
அஸ்வினி

யோகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

நரசிங்க முதலி
- சண்முகம்
  - வேலாயுதர்
    - நாகநாதர் + சிதம்பரம்
      - விசுவநாதர் + பாக்கியம்
      - சின்னாச்சிப் பிள்ளை + வீரபாகு
      - பெற்றிப் பிள்ளை + வேலாயுதப் பிள்ளை
        - மனோன்மணி
        - சதாசிவம்பிள்ளை
        - தியாகராஜா
        - சந்திரசேகரம்
        - சண்முகம்
        - சகாதேவன்
        - சிவபாதசுந்தரம்
        - நாகரத்தினம்
        - சங்கரலிங்கம் + புவனேஸ்வரி
      - செல்லம்மா
      - வள்ளியாச்சி + அப்பாத்துரை
        - முத்தையா
          - யோகேஸ்வரன்
          - கனேஸ்வரன்
          - நாகேஸ்வரி
          - விஷ்ணுநாதன்
          - அம்பிகா
          - அமிர்தலிங்கம் + இராசம்மா

யோகேஸ்வரிதேவி
- மோகன்ராஜன் + பவானி
  - பிரவீன்
  - அஸ்வினி
- மதனராஜன் + கமலாஜினி
  - வைத்திகா

**ஆறுமுகஞானியார் வம்சம்**
- முத்துக்குமாரு
  - பொன்னுப்பிள்ளை
  - வள்ளிப்பிள்ளை
  - தங்கமுத்து + செல்லப்பா

மாப்பாணமுதலி
- சிற்றம்பலம்
  - கோவிந்தர்
    - செல்லப்பா (→ செல்லப்பா)

தங்கமுத்து + செல்லப்பா:
- சேனாதிராசா + செல்லம்மா
  - மகேஸ்வரி
  - செல்லப்பா
  - பரமேஸ்வரி
  - துரைசிங்கம்
  - புவனேஸ்வரி
  - செல்லம்மா
- சரஸ்வதி + பாலசிங்கம்
  - சாவித்திரி
  - கமலா
  - மகிந்தா
  - இந்திரமதி
  - சித்திராதேவி
- பாக்கியம் + விசுவநாதன்
  - யோகேஸ்வரிதேவி
  - சங்கரலிங்கம்
  - அமிர்தலிங்கம்
  - தவேஸ்வரி
  - தனலிங்கம்
- முத்துக்குமாரு + சிவயோகம்
  - இந்திரகுமாரன்
  - சந்திரகுமாரன்
  - வசந்தகுமாரி
  - மோகனகுமாரி

தவேஸ்வரி + நல்லலிங்கம்

தனலிங்கம் + தர்மராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கையெனும் புழுக்குரம்பை யனைத்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக் கற்பூரமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமற வெங்கொங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிவெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தநற்றாத் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்னை
மாசற்ற வெறு வெளியை மன வெளியி லடைப்பாம்.

*வரகுணபாண்டியன் மனைவி பாடியது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By : ***JEYA GRAPHICS*** Colombo 13. Tel : 330812

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org